2001 ஆகஸ்ட் 29]

மாவட்டந்தோறும் பயிற்சி அளிக்கப்படுமா என்று கேட்கிறார்கள். மாவட்டந்தோறும் உழவர்களுக்கு எல்லாம் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. கல்லூரியிலும் அதற்கெல்லாம் 'மனி' (Money) தேவைப் படுகிறது. ஆகவே, அந்த எண்ணம் இப்பொழுது அரசுக்கு இல்லை. நீங்கள் சொல்கிற நல்ல கருத்துகளை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 29, திரு. கோவை தங்கம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

29–

பேருந்து வசதி

***895–திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) வால்பாறை தொகுதியில் போக்குவரத்து வசதி குறைவாக உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரித்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வால்பாறை பகுதியில் பயணிகள் தேவைக்கேற்ப தற்போது பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, வால்பாறை பகுதியில் பேருந்துகள் குறைவாக இயக்கப்பட்டு வருகின்றன என்ற கருத்து சரியானது அல்ல.

முற்பகல் 10—30

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை மலைப் பகுதியில் பேருந்துகள் மிகக் குறைவாகச் சென்று கொண்டிருக்கின்றன. மக்கள் பல மணி நேரம் காத்திருக்கிறார்கள். பேருந்துகளில் மக்கள் நெருக்கிக்கொண்டு செல்கிறார்கள். இதனால் தோட்டத் தொழிலாளர்கள் மிகவும் கவலை அடைந்திருக்கிறார்கள். 1991–96 ஆம் ஆண்டு மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2001 ஆகஸ்ட் 29

அவர்கள் ஆட்சியில் அங்கு பேருந்துகள் அதிகமாக ஓடிக்கொண்டிருந்தன. சென்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 3 பேருந்து வழித்தடங்கள் நிறுத்தப்பட்டு இருந்தன. அதனால் மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணையோடு, அங்கே வாழ்கின்ற மக்களுக்குப் போதுமான பேருந்துகளையும், மினி பேருந்துகளையும் விடுவதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், ஒரு நாளைக்கு இப்போது 40 ஆயிரம் ரூபாய் அரசுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. அரசுப் பேருந்துகள் குறைவாகச் செல்வதால், பிரைவேட் வேன்கள், பிரைவேட் கார்கள் அதிகமாக ஓடிக்கொண்டிருப்பதால் நஷ்டம் ஏற்படுகிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் அதைப் பரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதுபோல, 1991 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை அம்மாவினுடைய ஆட்சி போக்குவரத்துக் கழகங்களுடைய பொற்கால ஆட்சி என்பதை நான் ஏற்கெனவே இங்கே தெரிவித்திருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது வால்பாறை பகுதியிலே பேருந்துகள் செல்வது நிறுத்தப்பட்டுள்ளதாகச் சொன்னார்கள். தற்போது 58 பேருந்துகள் அந்தப் பகுதியிலே ஓடிக்கொண்டிருக்கின்றன. 100–க்கும் மேற்பட்ட சிறிய வேன்கள் அங்கே பேருந்துப் பயணிகளின் போக்குவரத்திற்கு இடையூறாக இருப்பதை மாற்றி, இடையூறு இல்லாமல் மக்கள் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு அந்த வட்டாரப் போக்குவரத்து ஆணையருக்குத் தகவல் கொடுக்கப்பட்டு, நடவடிக்கையில் உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு**: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]